78

**நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் (பொ)**
**தருமபுரி மண்டலம், தருமபுரி அவர்களின் நடவடிக்கைகள்**
**முன்னிலை : திரு.ப.யோகராஜா,பி.இ.,**

**ந.க.எண்.2828/2018 தம-2** **நாள்:- .01.2019**

பொருள் வரன்முறைப்படுத்துதல் திட்டம், .2017 நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அலுவலகம், தருமபுரி மண்டலம் / மாவட்டம் / வட்டம் / ஊராட்சி ஒன்றியம் - உங்குரானஅள்ளி ஊராட்சி / கிராமம் - ச.எண்.121/2G-ல் 1.32 ஏக்கர் (அ) 57552.00 ச.அடி பரப்பளவு இடத்தில் அமைந்துள்ள அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவிற்கு கொள்கை ஒப்புதல் வழங்குதல் - தொடர்பாக

பார்வை
1) அரசாணை (நிலை) எண். 78 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை நவ4(3)நாள். 04.05.2017.
2) அரசாணை (நிலை) எண்.172 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை நவ4(3)நாள். 13.10.2017.
3) நகர் ஊரமைப்பு ஆணையர் சென்னை அவர்களின் வழிகாட்டி நெறிமுறை ந.க.எண்.13193/2017/எல்ஏ2 நாள்.30.10.17, 31.10.17, 07.11.17, 17.11.2017 மற்றும் 20.12.17
4) மனுதாரர்,திரு.ஆர்.கிருஷ்ணன் அவர்களின் Online விண்ணப்பம்எண்.DTCP/L/0553057/2017, நாள்.29.10.2018

-------------

**ஆணை**

பார்வை (1) மற்றும் (2)-ல் கண்ட அரசாணையின்படியும் பார்வை (3)-ல் கண்ட வழிகாட்டி நெறிமுறைகளின் படியும் பார்வை (4)-ல் கண்ட கடிதத்துடன் பெறப்பட்ட உத்தேசம் பரிசீலனை செய்யப்பட்டு கீழ்காணும் உத்தரவு வழங்கப்படுகிறது.

தருமபுரி மாவட்டம் / வட்டம் / ஊராட்சி ஒன்றியம், உங்குரானஅள்ளி ஊராட்சி / கிராமம், ச.எண்.121/2G-ல் 1.32 ஏக்கர் (அ) 57552.00 ச.அடி பரப்பளவு இடத்தில் அமைந்துள்ள அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவிற்கு <u>ம.வ.(வ.மு)/ந.ஊ.து.இ(தம)எண்.06/2019</u> என எண்ணிடப்பட்டு கீழ்க்காணும் நிபந்தனைகளுடன் குடியிருப்பு மனைப்பிரிவிற்கு (In Principle Approval) கொள்கை ஒப்புதல் வழங்கப்படுகிறது.

| வ. எண். | விபரம் | பரப்பு | மனைகளின் எண்ணிக்கை | குறிப்பு |
|---|---|---|---|---|
| 1 | மனை இடத்தின் மொத்த பரபபு | 1.32 ஏக்கர் (அ) 57552.00 ச.அடி | 23 | ----- |
| 2 | விற்கப்பட்ட மனைகள் | 1976.00 ச.அடி | 01 | ---- |
| 3 | மொத்த விற்கப்படாத மனைகள் | 46649.57 ச.அடி | 22 | ----- |
| 4 | பூங்கா | 4672.00 ச.அடி | 03 | (10.02 % of unsold area) |

-2

879



செலுத்தப்பட வேண்டிய கட்டண விபரம்

1) பரிசீலனைக் கட்டணம்

| | |
|---|---|
| இணைய தளம் வாயிலாக மனை ஒன்றிற்கு ரூ.500/-வீதம பரிசீலனைக் கட்டணம் செலுத்திய மனை எண்களின் விவரம் | 1 & 2 = 02 மனைகளுக்கு ரூ.1000/-. Transaction No.PUR26842058272 என்ற எண்ணில் இணையதளத்தின் வாயிலாக செலுத்தப்பட்டுள்ளது. |

2) வரன்முறைப்படுத்தும் கட்டணம் மற்றும் வளர்ச்சிக் கட்டணம்

| மனை எண் | பரப்பளவு (சமீ) | வரன்முறைப்படுத்தும் கட்டணம் (ஒரு சதுர மீட்டருக்கு 30 ரூபாய் வீதம்) (ரூபாயில்) | வளர்ச்சிக் கட்டணம் (ஒரு சதுர மீட்டருக்கு 25 ரூபாய் வீதம் ) (ரூபாயில்) |
|---|---|---|---|

மேற்காண் மனை எண்கள் மற்றும் அதன் பரப்பளவு வரைபடத்திலும், உரிய கிரய ஆவணத்தை ஒப்பிட்டு சரிபார்த்து ம வேறுபாடு இருப்பின கிரய ஆவணத்தை அடிப்படையாகக் கொண்டு வரன்முறைப்படுத்தும் கட்டணம் மற்றும் வளர்ச்சிக் கட்டணம் இணைய தளம் வாயிலாகவோ அல்லது கருவூலத்திலோ செலுத்தலாம.

அ) வரன்முறைப்படுத்தும் கட்டணம் செலுத்துவதற்கான அரசு கணக்கு தலைபபு

| | |
|---|---|
| 0217-Urban Development-60 Other Urban Development Schemes-800 Others Receipts-AT Receipts Under Regularization charges of Unapproved layouts and plots-DTCP-27-Non Taxation Fees-30 Regularisation<br>DPC: 0217-60-800-AT-2730 | சலான் மூலம் அரசு கருவூலத்தில் செலுத்தலாம். |

ஆ) வளர்ச்சிக் கட்டணம் உள்ளாட்சியின வங்கிக் கணக்கில் வரவு வைக்க ஏதுவாக வங்கியின் பெயர் மற்றும் கணக்கு எண் ஆகிய விவரங்களை மனுதாரருக்கு தெரிவிக்குமாறு கேட்டுக கொள்ளப்படுகிறது.

முன்பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விற்கப்படாத மனைகளைப் பொறுத்தமட்டில ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட எண்ணிக்கையிலான, (மனுதாரருக்கு தேவைப்படும) மனைகளுக்கு உரிய கட்டணம் செலுத்தப்பட்டால் சம்பந்தப்பட்ட மனைகளுக்கான வரன்முறை ஆணை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

பார்வை 1 மற்றும் 2-ல் கூட்டிய அரசாணைகளின்படி மேற்காண் கட்டணம் தவிர வேறு கட்டணம் ஏதும் உள்ளாட்சி வசூலித்தல் கூடாது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

நிபந்தனைகள்

1) அரசாணை (நிலை) எண்.172,வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை நாள்.13.10.2017-ல் விதி எண்.7(g)(ii)-ன்படி மனைப்பிரிவு வரைபடத்தில் உள்ளவாறு சாலைகள் மற்றும் திறந்தவெளி ஒதுக்கீடு (OSR) இடங்கள் சம்மந்தப்பட்ட உள்ளாட்சியின் பெயருக்கு மாற்றம் செய்யப்பட்டதாக கருதப்படும்.

2) கொள்கை ஒப்புதல் வழங்கப்படும் மனைப்பிரிவில் உள்ள மனைகளின் அளவுகள் மற்றும் அமைப்பு ஆகியவற்றை இவ்வலுவலகத்தின் முன் அனுமதின்றி மாறுதல் செய்யக்கூடாது

3) நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டால் அல்லது மனைப்பிரிவிற்கு கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏறப்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் இம்மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட கொள்கை அளவிலான ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பின்றி ரத்து செய்யப்படும்.

நகர் ஊரமைப்பு துணை இயக்குநர்(பொ)
தருமபுரி மண்டலம்.

இணைப்பு.
கொள்கை ஒப்புதல் மனைப்பிரிவு வரைபடம் 3 நகல்கள்

பெறுநர்
தனி அலுவலர் / வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ),
உங்குரானஅள்ளி ஊராட்சி,
தருமபுரி ஊராட்சி ஒன்றியம்,
தருமபுரி மாவட்டம்.

நகல்

1) மனுதாரர்
திரு.கே.கிருஷ்ணன்,
2/59, ஒட்டப்பட்டி,
NGGO காலனி,
ஏ.ஜெட்டிஅள்ளி,
தருமபுரி.

2) வட்டாட்சியர்,
தருமபுரி வட்டம்,
தருமபுரி மாவட்டம்.
} சாலை மற்றும் OSR பகுதியினை உள்ளாட்சியின் பெயரில் வருவாய் ஆவணங்களில் உட்பிரிவு செய்யும் பொருட்டு

3) சார்பதிவாளர்,
2 எண் இணை சார்பதிவாளர் அலுவலகம்,
தருமபுரி மாவட்டம்
} சாலை மற்றும் OSR பகுதியினை உள்ளாட்சியின் பெயரில் பதிவு செய்யும் பொருட்டு

4) உதவி இயக்குநர் (ஊராட்சிகள்)
தருமபுரி மாவட்டம்.

5) உதவி இயக்குநர் (நில அளவை)
தருமபுரி மாவட்டம்.

82

உங்குரானஅள்ளி ஊராட்சி தனிஅலுவலர் அவர்களின் நடவடிக்கைகள்
முன்னிலை : திரு.ரா. ரவிச்சந்திரன்.

அலுவலக கடித எண்.1/2018-2019/இ.ஊ., நாள்: 31.01.2019

பொருள்: வரன்முறைபடுத்துதல் - தருமபுரி ஊராட்சி ஒன்றியம் - உங்குரானஅள்ளி ஊராட்சி, உங்குரானஅள்ளி கிராமம் சர்வே எண். 121/2ஜி -ல் ஆகியவற்றில் 5346.71 ச.மீ பரப்பில் அமைக்கப்பட்ட அனுமதியற்ற மனைப்பிரிவினை முறைப்படுத்துதல் - ஊராட்சியில் மனை வரைப்படஒப்புதல் வழங்குதல் - தொடர்பாக.

பார்வை:
1. துணை இயக்குநர்(பொ), தருமபுரி மண்டலம், தருமபுரி அவர்களின் ந.க.எண்.2828/2018/த.மஈகடித நாள்: 08.01.2019.
2. மனுதாரர் திரு. கே. கிருஷ்ணன் விண்ணப்பம் நாள் : 21.01.2019
3. இவ்வூராட்சி தீர்மான எண். 2/21.01.2019.

--------

**உத்தரவு:-**

தருமபுரி ஊராட்சி ஒன்றியம், உங்குரானஅள்ளி ஊராட்சி உங்குரானஅள்ளி கிராமம் சர்வேஎண். 121/2ஜி -ல் 5346.71 ச.மீ பரப்பளவு இடத்தில் ஏற்கனவே அமைக்கப்பட்டு 23 மனைகள் கொண்ட கிருஷ்ணாநகர் எனும் அனுமதியற்ற மனைப்பிரிவிற்கு தமிழக அரசின் வரன்முறைப்படுத்தும் திட்டத்தின்கீழ் பார்வை (1)ல் கண்ட கடிதத்தின் வாயிலாக கொள்கை ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இதன்படி மேற்படி இம்மனைபிரிவில் விற்பனையாகாத சர்வே எண்: 121/2ஜி ஆகியவற்றில் 3899.81 ச.மீ பரப்பில் கீழ்க்கண்ட 19 மனைகள் முறைப்படுத்த பார்வை 3-ல் கண்ட இவ்வூராட்சி தீர்மானம் மூலமாக அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. முறைப்படுத்தப்படும் விற்பனையாகாத காலிமனைகள் விவரம் 1, 2, 3, 5-19, 23 மொத்தம் 19 மனைகள்.

இதன்படி பார்வை1-ல் உள்ளவாறு தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்ட மேற்படி சர்வேஎண் 121/2ஜி -ல் 3899.81 ச.மீ பரப்பில் உள்ள 19 காலி மனைகளுக்கு ஊராட்சியில் மனை வரைபடஅனுமதி வழங்கக்கோரி பார்வை (2)-ல் கண்ட மனுவின் மூலம் ஊராட்சிக்கு விண்ணப்பம் செய்யப்பட்டிருந்தது. அதன்பேரில்,

i) இவ்விண்ணப்பத்தில் குறிப்பிட்டுள்ள சர்வேஎண். 121/2ஜி -ல் 3899.81 ச.மீ பரப்பில் அமைந்துள்ள 19 காலிமனைகளை தல ஆய்வு செய்யப்பட்டதை தொடர்ந்து, அரசாணை (நிலை) எண்.172, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை நாள்: 13.10.2017-ல் விதி எண். 7(g) (ii)-ன் படி மனைப்பிரிவு வரைபடத்தில் உள்ளவாறு சாலைகள் மற்றும் திறந்தவெளி ஒதுக்கீடு (OSR)

483

இடங்கள் சம்பந்தப்பட்ட உள்ளாட்சியின் பெயருக்கு மாற்றம் செய்யப்பட்டதாக கருதப்படும்.

ii) நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டால் அல்லது சாலைகள் மற்றும் திறந்தவெளி ஒதுக்கீடு(OSR) இடங்கள் உள்ளாட்சிக்கு ஒப்படைக்காத பட்சத்தில் அல்லது மனைப்பிரிவிற்கு ஊராட்சிமன்ற ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் இம்மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட ஊராட்சி மன்ற ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பின்றி ரத்து செய்யப்படும்.

சர்வே எண் : 121/2ஜி-ல் 3899.81 ச.மீ பரப்பில் அமைந்துள்ள 19 காலிமனைக்கு முறைப்படுத்தலுக்கான அபிவிருத்தி கட்டணமாக ரூ.97495/- (ரூபாய் தொண்ணூற்று ஏழாயிரத்து நானூற்று தொண்ணூற்றி ஐந்து மட்டும்) மற்றும் ஆய்வு கட்டணம் ரூ.2000/- (ரூபாய் இரண்டாயிரம் மட்டும்) மொத்த தொகை ரூ.99495/- ( ரூபாய் தொண்ணூற்று ஒன்பதாயிரத்து நானூற்று தொண்ணூற்றி ஐந்து மட்டும்) சலான் எண். 31801/31.01.2019-ன்படி ஊராட்சிக்கு செலுத்தப்பட்டுள்ளதை தொடர்ந்து மேற்படி காலிமனைகளை முறைப்படுத்தி ஊராட்சி ஒப்புதல் வழங்கி இதன்வழி உத்தரவிடப்படுகிறது.

தனி அலுவலர்/
வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ),
உங்குரான அள்ளி ஊராட்சி

31.1.2019

பெறுநர்:

1. திரு. கே.கிருஷ்ணன்,
   த/பெ.ராமிசெட்டி,
   க.எண்: 2/59,ஒட்டப்பட்டி,
   NGGO காலனி,
   ஏ. ஜெட்டிஅள்ளி,
   தருமபுரி.

2. சார்பதிவாளர் -II, தருமபுரி, தருமபுரி மாவட்டம்.